# ஒளிச்சுடர்

(சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளியின் காலாண்டு இதழ்)

## செப்டம்பர் 2025

## தமிழ் பள்ளி செய்திகள்


ACCREDITING COMMISSION FOR SCHOOLS
WESTERN ASSOCIATION OF SCHOOLS AND COLLEGES

*presents to*

CR TAMILPALLI

*this*

CERTIFICATE OF ACCREDITATION

*this School is accredited through*

JUNE 30, 2027

Dr. Odie J. Douglas, Commission Chair

Dr. Barry R. Groves, President

*WESTERN ASSOCIATION OF SCHOOLS AND COLLEGES* இணைப்பு கல்வி திட்டத்திற்கான அங்கீகாரச் சான்றிதழை **சிடார் ராபிட்ஸ் தமிழ் பள்ளி**க்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் பள்ளி மாணவர்கள் *STAMP WS Language Proficiency* தேர்வில் வெற்றி பெற்று ***"Bilingual Credit"*** பெறுவதற்கு உதவி பெறலாம்.

## வரவிருக்கும் முக்கிய நிகழ்வுகள்

***2025, நவம்பர் 15, சனிக்கிழமை :*** முதல் பருவத் தேர்வு

***2025, டிசம்பர் 13 மற்றும் 14:*** அமெரிக்க தமிழ் அகாடமி, ATA தன் "ஏழாவது ஆண்டு மாநாடு" 2025 டிசம்பர் 13-14 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) இணையதளம் வாயிலாக நடத்தும். இந்த நிகழ்வு தமிழ்ப் பாடத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் அவர்கள் தம் திறமைகள் வெளிப்படுத்தும் வாய்ப்புகளை வழங்கும்.

## பிறந்தநாள் வாழ்த்துகள்

**செப்டம்பர் :** அதிதி ப்ரதீப், ஆதியா ப்ரதீப், ஜேடன் ஆன்டனி வில்ஃபிரட் கார்த்தி கிருஷ்ணா பிரபு, மஹதி இளங்கோ, ஐஷ்ரான் இனிகோ தினேஷ் ஜாக்சன் சாமுவேல், மித்தின் மாரிமுத்து

**அக்டோபர் :** அதினவ் சச்சிதானந்த், திக்ஷா பிஜு, விபின் நிர்மல்ராஜ் அனுஸ்ரீ அன்பரசு, வருண் கார்த்திக் வேல்முருகன், பிரதன்யா தங்கம்ராஜதுரை, ஜாஸ்னா ஏஞ்சல் வில்ஃபிரட், பிரகாஷ் புரோட்டன், மீனாட்சி சக்திதாசன், மகாலக்ஷ்மி சக்திதாசன், இனிய ருபன்

**நவம்பர் :** விஷ்வகார்த்திக் வேல்முருகன், தேவ் சரண் ராம்குமார், ஷிவானி தியாகராஜன், அக்ஷித் யுவராஜு, ஆராதனா வைத்தீஸ்வரன், ஆத்யா பாலாஜி


## விளையாட்டு நிலையம்

### அறிவியல் அறிவோம்



ஏன் நெருப்பு எப்போதும் மேல் திசையை நோக்கி எரிகின்றது?

### குறுக்கெழுத்துப் புதிர்




**மேலிருந்து கீழ்**

1. அம்மா

2. சோறு

3. விநாயகருக்கு படைக்கும் ஓர் உணவு

**இடமிருந்து வலம்**

1. விரைவு வேறு சொல்

**வலமிருந்து இடம்**

1. மரத்தில் வசிக்கும் ஒரு கொறிணி

**கீழிருந்து மேல்**

1. தந்தை

பெற்றோரிடமோ, இணையத்தளத்திலோ தேடாமல் நீங்களே சிந்தியுங்கள்!

மேற்கண்ட போட்டிகளுக்கு பதில்களை crtamilpalli@gmail.comக்கு அனுப்பவும்

# தமிழ் பள்ளி மாணவர்களின் சாதனைகள்



*2025 சிறுவர்களுக்கான மட்டைப்பந்து போட்டிகள் ஜூன் 27 முதல் செப்டம்பர் 14 வரை நடைபெற்றன. இறுதி போட்டியில்* ***"சிடார் சூப்பர் கிட்ஸ்"*** *அணி சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது. இந்த அணியின் கேப்டன்* ***ஸ்ரீராம் பாலசுப்ரமணியன்*** *தமிழ் பள்ளியில் நிலை ஆறில் பயின்று வரும் மாணவர் என்பதும், அணியின் முக்கிய பயிற்சியாளர்* ***திரு. ஜேம்ஸ் சாம்ராஜ்*** *நிலை-6 ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அணியில் மாணவர்கள்* ***ஆதி அன்பரசு*** *(நிலை-3),* ***ஜோஸ்வா ஜேம்ஸ்*** *(நிலை-4)* ***குருவத்சன் நிர்மல் ராஜ்*** *(நிலை-3) மாணவி* ***ஸ்ரீநயா நவீன்*** *(நிலை-7) ஆகிய அனைவரும் விளையாடினர்.*



*இறுதி போட்டியில்* ***"மார்வெல்ஸ்"*** *அணி RUNNER-UP சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது. இந்த அணியின் கேப்டன்* ***ஹரிஷ் பாலாஜி*** *தமிழ் பள்ளியில் நிலை ஆறில் பயின்று வரும் மாணவர் என்பதும், அணியின் முக்கிய பயிற்சியாளர்* ***திரு. பாலாஜி சண்முகம்*** *நிலை-8 ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அணியில் மாணவர்கள்* ***ஸ்ரீஹன் தங்கவேல்*** *(நிலை-4),* ***பிரத்யூஷ் ஜெயகார்த்திகேயன்*** *(நிலை-6),* ***தேவ் சரண் ராம்குமார்*** *(நிலை-6), மாணவி* ***வன்ஷிகா விஸ்வநாதன்*** *(நிலை-6) ஆகிய அனைவரும் விளையாடினர்.*



**சஞ்சீவ் தருண் கார்த்திக் ராஜா, நிலை 7**

*2025 சிறுவர்களுக்கான மட்டைப்பந்து போட்டியில் சிறந்த* ***பந்து வீச்சாளராக*** *அசத்தியுள்ளார். இவர் 11 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் மற்றும் இவர்* ***"நயிட் ரைடர்ஸ்"*** *அணிக்காக விளையாடினார்.*



**பிரத்யூஷ் ஜெயகார்த்திகேயன், நிலை 6**

- KUMON தங்க விருது பெற்றுள்ளார்
- AYSO 1112 CR கால்பந்து போட்டியில் 2025 12U பிரிவு சிறந்த நேர்மை மனப்பான்மை - முதல் பரிசு, AYSO 1112 CR 2025 12U ஆண்கள் பிரிவு - மூன்றாம் பரிசு
- Linn Mar Advanced நீச்சல் திட்டத்தில் இறுதி நிலையமான நிலை 10-ஐ தேர்ச்சியாக முடித்தார்




**ஹரிஷ் பாலாஜி, நிலை 6**

2025 ஆம் ஆண்டு AYSO நடத்திய பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பிரிவில் ஹரிஷ் பாலாஜி மற்றும் அவரின் அணி முதல் பரிசு பெற்றது. இந்த ஆண்டில் அதிக கோல் அடித்து சிறப்பு ஆட்ட நாயகனாக போற்றப்ப ட்டார்.



**வருண் கார்த்திக் வேல்முருகன், நிலை 5**

சிகாகோ, டுபுயூக் மற்றும் டே மாய்னில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் வருண் கலந்து கொண்ட அணிக்கு முதல் பரிசு கிடைத்தது.

**மாணவர்களுக்கு இணையாக ஆசிரியர்களும் அசத்தியுள்ளனர்**



**ஆசிரியர்கள்: பாலாஜி சண்முகம், ஜேம்ஸ், சாம்ராஜ் சுரேஷ் கண்ணன், தன்னார்வலர்: வில்பிரட் அன்டனி , பெற்றோர்: வேலுமணி**

*2025 ஆம் ஆண்டு காலின்ஸ் உள்ளரங்கு கைப்பந்து போட்டியில் Set & Hit அணி இரண்டாம் பரிசு பெற்றது.*

**உங்களுடைய கேள்விகளையும், விமர்சனத்தையும் crtamilpalli@gmail.comக்கு அனுப்பவும்**